# 6ஆம் வகுப்பு தமிழ்

## செய்யுள் : 1. பாரதம் அன்றைய நாற்றங்கால்

### மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. தேசம் உடுத்திய நூலாடை எனக் கவிஞர் குறிப்பிடும் நூல்
   அ) திருவாசகம் ***ஆ) திருக்குறள்*** இ) திரிகடுகம் ஈ) திருப்பாவை
2. காளிதாசனின் தேனிசைப் பாடல்கள் எதிரொலிக்கும் இடம்
   ***அ) காவிரிக்கரை*** ஆ) வைகைக்கரை இ) கங்கைக்கரை ஈ) யமுனைக்கரை
3. கலைக்கூடமாகக் காட்சி தருவது
   ***அ) சிற்பக்கூடம்*** ஆ) ஓவியக்கூடம் இ) பள்ளிக்கூடம் ஈ) சிறைக்கூடம்
4. நூலாடை என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது
   ***அ) நூல் + ஆடை*** ஆ) நூலா + டை இ) நூல் + லாடை ஈ) நூலா + ஆடை
5. எதிர் + ஒலிக்க என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்
   அ) எதிரலிக்க ஆ) எதிர்ஒலிக்க ***இ) எதிரொலிக்க*** ஈ) எதிர்ரொலிக்க

**நயம் அறிக.**

1. **பாரதம் அன்றைய நாற்றங்கால் என்னும் பாடலில் அமைந்துள்ள எதுகைச் சொற்களை எடுத்து எழுதுக.**

   ***எதுகை :*** இரண்டாம் எழுத்து (சீர் அல்லது அடியில்) ஒன்றி வருதல்.

   * **சீர் எதுகை :** தெ**ய்**வ - நெ**ய்**த
   * **அடி எதுகை :** மெ**ய்**களைப் - மெ**ய்**யுணர்வு, பு**ல்**வெளி - க**ல்**லைக், அ**ன்**னை - அ**ன்**னிய

2. **பாரதம் அன்றைய நாற்றங்கால் என்னும் பாடலில் அமைந்துள்ள மோனைச் சொற்களை எடுத்து எழுதுக.**

   ***மோனை :*** முதல் எழுத்து (சீர் அல்லது அடியில்) ஒன்றி வருதல்.

   * **சீர் மோனை : க**ம்பனின் - **க**விதை, **க**ட்டி - **க**லைக்கூடம், **அ**ன்னை - **அ**முத
   * **அடி மோனை : மெ**ய்களைப் - **மெ**ய்யுணர்வு, **கா**ளி - **கா**விரிக், **க**ம்பனின் - **க**ங்கை, **பு**ல்வெளி - **பு**ன்னகை, **அ**ன்னை - **அ**ன்னிய, **அ**ண்ணல் - **அ**றத்தின்

3. **பாரதம் அன்றைய நாற்றங்கால் என்னும் பாடலில் அமைந்துள்ள இயைபு சொற்களை எடுத்து எழுதுக.**

   ***இயைபு :*** இறுதி எழுத்தோ, சொல்லோ, சீரோ, அடியோ ஒன்றி வருவது இயைபு ஆகும்.

   * நூலாடை - மேலாடை
   * எதிரொலிக்க - இசையமைக்க
   * பூத்தொடுக்கும் - நலம்கேட்கும்
   * தேசமிது - வாசலிது

**குறுவினா**

1. **தாராபாரதியின் பாடலில் இடம்பெற்றுள்ள கவிஞர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.**

   **தாராபாரதியின் பாடலில் இடம்பெற்றுள்ள கவிஞர்களின் பெயர்கள் :**

   * திருவள்ளுவர்
   * காளிதாசர்
   * கம்பர்

2. **இந்தியாவின் மேற்கு, கிழக்கு ஆகிய திசைகளை இணைத்துக் கவிஞர் காட்டும் காட்சியை எழுதுக.**

மேற்கு தொடர்ச்சி மலைகளிலிருந்து உருவாகும் ஆறுகள் கிழக்கு நோக்கிப் பாய்ந்து வங்காள விரிகுடாவில் கலப்பதை கவிஞர் பின்வருமாறு காட்சிப்படுத்துகிறார்.

“மேற்கு மலைகள் நதிகளை அனுப்பிக்
கிழக்கு கரையில் நலம் கேட்கும்!”

**சிந்தனை வினா**

**நம் நாட்டின் முன்னேற்றத்திற்கு மாணவர்கள் செய்ய வேண்டியவை பற்றிச் சிந்தித்து எழுதுக.**

***நம் நாட்டின் முன்னேற்றத்திற்கு மாணவர்கள் செய்ய வேண்டியவை :***

- இன்றைய மாணவர்கள் நாளைய இந்தியாவைத் தாங்கும் தூண்கள் செயல்பட முன்வர வேண்டும்.
- இந்தியாவின் வளர்ச்சியே மாணவர்களின் கையில்தான் உள்ளது. மாண் + அவன் = மாணவன். மாண் என்றால் பெருமை. அதனால்தான் மாண் + அவர்கள் என்று இந்தப் பருவத்தினரை ஊக்கப்படுத்தி வருகின்றனர். மாணவர்களின் ஊக்கத்தில் வருங்கால இந்தியாவின் வளமை அடங்கி இருக்கிறது.
- கல்லை உளியால் செதுக்கினால்தான் அழகான சிலை உருவாகும். அவற்றை போல மாணவர்களைச் செம்மைப்படுத்தினால்தான் நம் நாடு வளரும்.
- ஒவ்வொரு மாணவனும், படித்த இளைஞனும் தங்களுடைய ஓய்வு நேரத்தில் முதலில் தன்னுடைய குடும்பத்தை உயர்ந்த நிலைக்குக் கொண்டு வருவதற்குப் பாடுபட வேண்டும். நாட்டை நல்வழிப்படுத்தவும் மேம்பட்ட நிலைக்கு உயர்த்தவும் மாணவர்களின் மகத்தான பொறுப்பே முதலிடத்தில் உள்ளது.
- படித்துவிட்டோம், வேலைக்குப் போகிறோம், வருவாயைப் பெற்றோரிடம் கொடுத்தோம் என்று இல்லாமல் பெற்றோருக்கு உதவுதல், வீட்டு வேலைகளைச் செய்தல், கிராமப்புற இளைஞர்கள் காலை, மாலை வேளைகளில் வயலுக்குச் சென்று தந்தைக்கு உதவுதல் போன்ற பணிகளைச் செய்யலாம். ஒவ்வொரு மாணவனும் இதைக் கடைப்பிடித்தால் நாடு கண்டிப்பாக முன்னேறும்.
- மனிதநேயம் வளர மாணவர்கள் பாடுபடுதல் அவசியம். சமூகத் தொண்டுகளில் பெயருக்காகவும், புகழுக்காகவும் இல்லாமல் ஆர்வத்துடனும் முழு ஈடுபாட்டுடனும் செயல்பட வேண்டும். ஏழை, எளியவர்களுக்கு உதவி செய்வதில் மாணவர்கள் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்.

## கற்பவை கற்றபின்

1. **பாரதம் அன்றைய நாற்றங்கால் என்னும் பாடலை இசையோடு பாடுக.**

   https://diksha.gov.in/play/content/do_3129408130528460801 87

2. **நாட்டு முன்னேற்றத்தில் நம் பங்கு என்னும் தலைப்பில் பேசுக.**

   இந்தியாவின் முதுகெலும்பு கிராமங்கள் என்பது போல இந்திய நாட்டின் முன்னேற்றத்திற்கு முதுகெலும்பாய்த் திகழ்வது நம்மைப் போன்ற மாணவர்கள்தாம். நாம் நமது சக்தியை நல்வழியில் பயன்படுத்தி நாட்டின் வளர்ச்சிக்கு உழைக்க வேண்டும். நாம் பெற்றோர் கூறுவதையும், ஆசிரியர் கூறுவதனையும் கேட்டு செயலாற்ற வேண்டும்.

நம்மைப் போன்ற மாணவர்கள் முயன்றால் எதிர்கால வரலாற்றையே சிறப்பாக மாற்றலாம். மாணவர்கள் இளம்வயதிலேயே பொதுத்தொண்டு செய்வதைப் பற்றி அறிய வேண்டும் என்பதற்காகவே பள்ளிகளில் சாரணர் இயக்கம், செஞ்சிலுவைச் சங்கம், தேசிய மாணவர் படை, நாட்டு நலப்பணி இயக்கம் ஆகிய இயக்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வமைப்புகளில் மாணவர்கள் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். இத்தொண்டு பதிலுதவி பாராத் தொண்டாக இருக்க வேண்டும்.

பொதுத்தொண்டு செய்ய முனையும் மாணவர்கள் தன்னலமற்றவராக இருத்தல் வேண்டும். ஆடம்பர வாழ்க்கையை எதிர்ப்பவராகவும் இருக்க வேண்டும். அடக்கத்துடன் இருக்க வேண்டும். ஏமாற்றம் ஏற்பட்டால் சகித்துக் கொள்பவராய் இருக்க வேண்டும். அளவற்ற பொறுமையுடனும், கீழ்ப்படியும் பண்புடனும் இருத்தல் அவசியம் ஆகும்.

அப்துல்கலாம் கூறியதைப் போல் ‘கனவு காணுங்கள் ஆனால் கனவு என்பது நீ தூக்கத்தில் காண்பது அல்ல உன்னை தூங்க விடாமல் பண்ணுவது எதுவோ அதுவே இலட்சிய கனவு’ என்பதைப் போல் நம்முடைய வாழ்வில் முயற்சியைக் கைவிடாமல் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும். தாழ்வு மனப்பான்மையை நீக்கி திறமையை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

ஆபத்துக் காலங்களில் மட்டும்தான் உதவி செய்ய வேண்டும் என்று இருக்கக்கூடாது. எந்நிலையிலும் பிறர் துயர் களைய நாம் உதவ வேண்டும். சாலை விபத்துகளில் சிக்கியவர்களை உடனடியாக மருத்துவமனைக்கு அனுப்புதல், அவருடைய உறவினர்க்குத் தகவல் அனுப்புதல், தீ விபத்து ஏற்பட்டால் தீயணைப்பு வீரர்களின் ஆலோசனைப்படி பாதிக்கப்பட்டவர்க்கு உதவுதல் போன்ற பணிகளைச் செய்யலாம்.

சுத்தமான குடிநீர், நல்ல உணவு போன்றவை ஏழை, எளியவர்களுக்குக் கிடைக்கும் வகையில் செயல்படும் எண்ணம் மாணவர்களுக்கு இருக்க வேண்டும். சுகாதாரமற்ற பகுதிகளில் வாழும் மக்களுக்குக் கொசுக்கள் மூலம் பரவும் நோய்கள் குறித்து கூறி விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். சுற்றுப்புறங்களைத் தூய்மையாக வைத்துக் கொள்வதற்கான அவசியத்தைத் தெளிவுப்படுத்த வேண்டும். டெங்கு, பன்றிக்காய்ச்சல் போன்ற காய்ச்சல்கள் வராமல் பாதுகாத்துக் கொள்வதற்கான வழிமுறைகளை மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும்.

குளம், குட்டைகளை ஆழப்படுத்துதல், மரங்களை வெட்டாமல் பாதுகாத்தல், புதியதாக மரக்கன்றுகள் நடுதல், அனைத்து இல்லங்கள், அலுவலகங்கள் மற்றும் தொழிற்சாலைகளில் மழைநீர் சேகரிப்பு அமைப்புகளைக் கட்டுதல், சுற்றுச்சூழல் பாதுகாத்தல் போன்றவை தற்கால தேவையாக உள்ளன. இவற்றை மாணவர்கள் நல்ல முறையில் செய்ய வேண்டும்.

விழாக்காலங்களில் பொது இடங்களில் மக்கள் செல்வதற்கு வரிசையை ஒழுங்குப்படுத்துதல், போக்குவரத்துக் காவலர்களுக்கு உதவுதல் போன்ற பணிகளையும் செய்யலாம்.

“துறவும் தொண்டும்தான் இந்தியாவின் இலட்சியங்கள் அந்த இருவழிகளில் நாட்டைச் செலுத்தினால் மற்றவை தாமாக சரியாகிவிடும்” என்று சுவாமி விவேகானந்தர் கூறியுள்ளார். இவ்விரு வழிகளில் மாணவர்கள் தொண்டு செய்து நாடு வளம் பெற வழி செய்ய வேண்டும்.

# உரைநடை : தமிழ்நாட்டில் காந்தி

## மதிப்பீடு

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. காந்தியடிகளிடம் உடை அணிவதில் மாற்றத்தை ஏற்படுத்திய ஊர் __________.

   அ) கோவை **ஆ) மதுரை** இ) தஞ்சாவூர் ஈ) சிதம்பரம்

2. காந்தியடிகள் __________ அடி நிழலில் இருந்து தமிழ் கற்க வேண்டும் என்று விரும்பினார்.

   அ) நாமக்கல் கவிஞர் ஆ) பாரதிதாசன்

   **இ) உ.வே.சாமிநாதர்** ஈ) பாரதியார்

### பொருத்துக.

1. இலக்கிய மாநாடு - பாரதியார்
2. தமிழ்நாட்டுக் கவிஞர் - சென்னை
3. குற்றாலம் - ஜி.யு.போப்
4. தமிழ்க் கைேயடு - அருவி

**விடைகள்**

1. சென்னை
2. பாரதியார்
3. அருவி
4. ஜி.யு.போப்

### சொற்றொடரில் அமைத்து எழுதுக.

1. ***ஆலோசனை*** : எந்த ஒரு செயலை செய்யும்போதும் பெரியவர்களிடம் **ஆலோசனை** கேட்டு அதன் படி செய்தல் வேண்டும்.
2. ***பாதுகாக்க*** : நம் வீட்டையும், நாட்டையும் **பாதுகாக்க** அனைவரும் ஒற்றுமையுடன் செயல்பட வேண்டும்.
3. ***மாற்றம்*** : இன்றைய ***மாற்றம்*** நாளைய இலட்சியமாகும்.
4. ***ஆடம்பரம்*** : காந்தியடிகள் ***ஆடம்பரத்தை*** தவிர்த்து எளிமையை விரும்பினார்.

### குறுவினா

**1. காந்தியடிகள் மதுரை மீனாட்சியம்மன் கோவிலுக்குள் முதலில் ஏன் நுழையவில்லை?**

மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுக்குள் செல்ல எல்லா மக்களுக்கும் அனுமதி இல்லை என்பதால் காந்தியடிகள் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுக்குள் செல்லவில்லை.

**2. காந்தியடிகளுக்குத் தமிழ் கற்கும் ஆர்வத்தை ஏற்படுத்திய நிகழ்வைக் கூறுக.**

- காந்தியடிகள் தமக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பைப் பற்றிப் பலமுறை கூறியுள்ளார். தென்னாப்பிரிக்காவில் வாழ்ந்தகாலத்தில் தமிழ் மொழியைக் கற்கத் தொடங்கியுள்ளதாகக் கூறியுள்ளார். திருக்குறள் அவரைப் பெரிதும் கவர்ந்த நூலாகும்.
- 1937ஆம் ஆண்டு சென்னையில் இலக்கிய மாநாட்டுக்குக் காந்தியடிகள் தலைமை வகித்தார். உ.வே.சாமிநாதர் வரவேற்புக் குழுத் தலைவராக இருந்தார். உ.வே.சாமிநாதரின் உரையைக் கேட்ட காந்தியடிகள் மகிழ்ந்தார். "இந்தப் பெரியவரின் அடி நிழலில் இருந்து தமிழ் கற்க வேண்டும் என்னும் ஆவல் உண்டாகிறது" என்று கூறினார் காந்தியடிகள்.

**சிறுவினா**

1. **காந்தியடிகளின் உடை மாற்றத்திற்குக் காரணமாக அமைந்த நிகழ்வினை எழுதுக.**

***காந்தியடிகளின் உடை மாற்றத்திற்குக் காரணமாக அமைந்த நிகழ்வு :***

- காந்தியடிகள் 1921 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் தமிழ்நாட்டிற்கு வந்தார். அப்போது புகைவண்டியில் மதுரைக்குச் சென்றார். செல்லும் வழியில், பெரும்பாலான மக்கள் இடுப்பில் ஒரு துண்டு மட்டுமே அணிந்து இருப்பதைக் கண்டார்.
- காந்தியடிகள் நீளமான வேட்டி, மேல்சட்டை, பெரிய தலைப்பாகை அணிவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.
- பெரும்பாலான இந்தியர்கள் போதிய உடைகள் இல்லாமல் இருக்கிறார்கள். தான் மட்டும் இவ்வளவு துணிகளை அணிவதா? என்று சிந்தித்தார்.
- அன்று முதல் வேட்டியும் துண்டும் மட்டுமே அணியத் தொடங்கினார். அவரது தோற்றத்தில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்திய பெருமை தமிழ்நாட்டுக்கு உண்டு. அந்தக் கோலத்திலேயே தம் வாழ்நாள் முழுவதும் இருந்தார். உலகம் போற்றிய எளிமைத் திருக்கோலம் இதுவாகும்.

2. **காந்தியடிகளுக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பை எழுதுக.**

***காந்தியடிகளுக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பு :***

- காந்தியடிகள் தமக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பைப் பற்றிப் பலமுறை கூறியுள்ளார். தென்னாப்பிரிக்காவில் வாழ்ந்த காலத்தில் தமிழ் மொழியை கற்கத் தொடங்கியுள்ளதாகக் கூறியுள்ளார்.
- ஜி.யு.போப் எழுதிய தமிழ்க்கையேடு தம்மைக் கவர்ந்ததாகவும் குறிப்பிட்டு உள்ளார். திருக்குறள் அவரைக் கவர்ந்த நூலாகும்.
- 1937 ஆம் ஆண்டு சென்னையில் இலக்கிய மாநாடு ஒன்று நடைபெற்றது. அம்மாநாட்டுக்குக் காந்தியடிகள் தலைமை வகித்தார். உ.வே.சாமிநாதர் வரவேற்புக்குழுத் தலைவராக இருந்தார். உ.வே.சாமிநாதரின் உரையைக் கேட்ட காந்தியடிகள் மகிழ்ந்தார்.
- “இந்தப் பெரியவரின் அடி நிழலில் இருந்து தமிழ் கற்க வேண்டும் என்னும் ஆவல் உண்டாகிறது” என்று கூறினார் காந்தியடிகள். இந்நிகழ்வுகள் மூலம் ஏற்றத்தாழ்வு அற்ற சமுதாயம் மலர வேண்டும் என்னும் காந்தியடிகளின் உள்ள உறுதியை அறிந்து கொள்ளலாம்.
- மேலும் அவரே தமிழ் மொழியின் மீது கொண்ட பற்றையும் அறிந்து கொள்ள முடிகிறது.

**சிந்தனைவினா**

**காந்தியடிகளிடம் காணப்படும் உயர்ந்த பண்புகளாக நீங்கள் கருதுபவை யாவை?**

***காந்தியடிகளிடம் காணப்படும் உயர்ந்த பண்புகள் :***

- உண்மை பேசுதல்
- நேர்மை
- இன்னா செய்யாமை
- பிறர் துன்பம் தீர்க்கும் திறம்
- அகிம்சை வழிப் போராட்டம்
- ஆடம்பரத்தை எதிர்த்து எளிமையைப் போற்றியமை
- தீண்டாமை ஒழிப்பு
- ஒற்றுமையைப் போற்றியமை.

## கற்பவை கற்றபின்

1. **காந்தியடிகளின் பொன்மொழிகளைத் திரட்டுக.**
   ***காந்தியடிகளின் பொன்மொழிகள் :***
   - எங்கே அன்பு இருக்கிறதோ அங்கே வாழ்வு உய்த்திருக்கிறது.
   - நீ என்ன செய்கிறாய் என்பது முக்கியமல்ல நீ செய்கிறாய் என்பதுதான் முக்கியம்.
   - அமைதியை அடைவதற்கென எந்தப் பாதையும் கிடையாது. அமைதியேதான் பாதை.
   - எல்லாவற்றுக்கும் அறம்தான் அடிப்படை. அந்த அறத்திற்கே உண்மைதான் அடிப்படை.
   - பிறர் எப்படி இருக்க வேண்டும் என்று நீ விரும்புகிறாயோ முதலில் அதுபோல நீ மாறு.
   - பொறுமையும், விடாமுயற்சியும் இருந்தால் சிரமங்கள் எனும் மலையை வென்றுவிடலாம்.
   - குணநலனும், புனிதத்தன்மையுமே பெண்ணின் உண்மையான ஆபரணம்.
   - சாதுவான வழியில், உன்னால் உலகத்தையும் அசைக்க முடியும்.
   - உடலின் வீரத்தைவிட உள்ளத்தின் வீரம் மிகவும் உயர்வானது.
   - எல்லாச் சமயங்களுக்கும் பொதுவானது அகிம்சை.
   - தோல்வி மனச்சோர்வைத் தருவதில்லை. மாறாக ஊக்கத்தையே தருகிறது.

2. **காந்தியடிகள் நடத்திய அறவழிப் போராட்டங்களின் பெயர்களைத் தொகுக்க.**
   ***காந்தியடிகள் நடத்திய அறவழிப் போராட்டங்கள் :***
   - கத்தியின்றி இரத்தமின்றி கண்டனப் போராட்டம்
   - கதர் இயக்கம்
   - ஒத்துழையாமை இயக்கம்
   - உண்ணாவிரதம்
   - உப்பு சத்தியாகிரகம்
   - சட்டமறுப்பு இயக்கம்
   - தனியாள் அறப்போராட்டம்
   - வெள்ளையனே வெளியேறு.

# விரிவானம் : வேலுநாச்சியார்

## மதிப்பீடு

1. **வேலுநாச்சியார் சிவகங்கையை மீட்ட நிகழ்வைச் சுருக்கமாக எழுதுக.**
   **வேலுநாச்சியார் சிவகங்கையை மீட்ட நிகழ்வு**

   வேலுநாச்சியார் இராமநாதபுரத்தை ஆண்ட செல்லமுத்து மன்னரின் ஒரே மகள். வேலுநாச்சியார் தமிழ், ஆங்கிலம், பிரெஞ்சு, உருது ஆகிய மொழிகளைக் கற்றார். சிலம்பம், குதிரையேற்றம், வாள்போர், வில்பயிற்சி ஆகியவற்றைக் கற்றுக்கொண்டார். அவர் சிவகங்கை மன்னர் முத்துவடுகநாதரை மணந்துகொண்டார். காளையார் கோவிலில் நடைபெற்ற போரில் முத்துவடுகநாதர் ஆங்கிலப் படையுடன் போரிட்டு வீரமரணம் அடைந்தார். வேலுநாச்சியார் ஆங்கிலேயரை வென்று சிவகங்கையை மீட்க உறுதி பூண்டார். திண்டுக்கல் கோட்டையில் தங்கி ஒரு படையைத் திரட்டிப் பயிற்சி அளித்தார்.

   திண்டுக்கல் கோட்டையில் நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் வேலுநாச்சியார், அமைச்சர் தாண்டவராயன், தளபதிகளாகிய பெரிய மருது, சின்ன மருது மற்றும் குறுநில மன்னர்கள் சிலர் இருந்தனர். சிவகங்கையை இழந்து எட்டு ஆண்டுகள் ஆகிவிட்டதால், எப்படியாவது சிவகங்கையை மீட்க வேண்டும் என்று ஆலோசித்துக் கொண்டிருந்தனர். அப்போது ஐதர்அலி அனுப்பிய ஐயாயிரம் படை வீரர்கள் வந்தனர். அடுத்தநாள் சிவகங்கையை மீட்கப் புறப்படலாம் எனத் திட்டமிட்டனர்.

முத்துவடுகநாதர் கொல்லப்பட்ட காளையார் கோவிலை முதலில் கைப்பற்றிய பிறகே சிவகங்கையை மீட்கவும் திட்டமிட்டனர். அதன்படி ஆண்கள் படைப்பிரிவுக்கு மருது சகோதரர்களும் பெண்கள் படைப்பிரிவுக்குக் குயிலியும் தலைமை ஏற்றனர்.

திட்டமிட்டபடி காளையார்கோவிலில் வேலுநாச்சியாரின் படைக்கும் ஆங்கிலேயரின் படைக்கும் இடையே நடைபெற்ற கடுமையான போரின் இறுதியில் ஆங்கிலேயரின் படையைத் தோற்கடித்து காளையார் கோவிலை வேலுநாச்சியார் கைப்பற்றினார்.

காளையார் கோவிலைக் கைப்பற்றியதும், உடனே சிவகங்கையைத் தாக்கலாம் என்று பெரிய மருது கூறினார். அதற்கு வேலுநாச்சியார் "அவசரம் வேண்டாம், இப்போது சிவகங்கை கோட்டைக் கதவுகள் அடைக்கப்பட்டிருக்கும். வரும் விஜயதசமித் திருநாள் அன்று கதவுகள் திறக்கப்படும். அப்போது உள்ளே நுழையலாம்" என்றார். "விஜயதசமி நாளில் பெண்களுக்கு மட்டும் கோட்டைக்குள் செல்வதற்கு அனுமதியுண்டு. பெண்கள் பிரிவினர் கூடைகளில் பூக்கள், பழங்கள் ஆகியவற்றுடன் ஆயுதங்களை மறைத்துச் செல்லட்டும். அவர்கள் உள்ளே தாக்குதலைத் தொடங்கியதும் ஆண்கள் பிரிவினரும் கோட்டைக்குள் நுழைந்து தாக்கி ஆங்கிலேயரை விரட்டிவிடலாம்" என்றார்.

வேலுநாச்சியாரைக் காட்டிக் கொடுக்குமாறு ஆங்கிலேயர்கள் உடையாள் என்னும் பெண்ணை வற்புறுத்தியும், அவள் மறுத்ததால் அவளைக் கொன்றுவிட்டார்கள். அவளுக்கு உரிய முறையில் சிறப்புச் செய்ய வேண்டும் என்றார் அமைச்சர் தாண்டவராயன். வேலுநாச்சியாரின் உத்தரவின்படி நடுகல் நடப்பட்டது. வேலுநாச்சியார் சிவகங்கையை நோக்கிச் சென்றபோது வழியில் உடையாளின் நடுகல்லுக்குத் தாம் வைத்திருந்த தாலியை எடுத்துக் காணிக்கையாகச் செலுத்தி வணங்கினார். வீரர்கள் "உடையாள் புகழ் ஓங்குக" என்று முழங்கினர்.

குயிலி பெண்கள் படைப்பிரிவுடன் மாறுவேடத்தில் உள்ளே சென்று ஆயுதக் கிடங்குக்குத் தீ வைத்தாள். வேலுநாச்சியார் படைவீரர்களுடன் கோட்டைக்குள் புகுந்தார். ஆங்கிலேயரின் படையுடன் கடுமையாகப் போரிட்டு வென்றார். ஆங்கிலப்படை 2 கோட்டையைவிட்டு ஓடியது. இவ்வெற்றிக்குப் பின் குயிலியின் உயிர்த் தியாகம் இருந்தது. குயிலி தன் உடலில் தீ வைத்துக் கொண்டு ஆயுதக் கிடங்குக்குள் குதித்துவிட்டாள். தன் உயிரைக் கொடுத்து நாட்டை மீட்டுக் கொடுத்தாள் குயிலி. வேலுநாச்சியார், "அவளது துணிவுக்கும் தியாகத்திற்கும் வீரத்திற்கும் தலை வணங்குகிறேன்" என்று கூறினார்.

வேலுநாச்சியாரின் வீரம், மருது சகோதரர்களின் ஆற்றல், ஐதர் அலியின் உதவி ஆகியவற்றோடு குயிலியின் தியாகமும் இணைந்ததால் சிவகங்கை மீட்கப்பட்டது.

## கற்பவை கற்றபின்

**இக்கதையை நாடகமாக வகுப்பறையில் நடித்துக் காட்டுக.**

வேலுநாச்சியார் இராமநாதபுரத்தை ஆண்ட செல்லமுத்து மன்னரின் ஒரே மகள். வேலுநாச்சியார் தமிழ், ஆங்கிலம், பிரெஞ்சு, உருது ஆகிய மொழிகளைக் கற்றார். சிலம்பம், குதிரையேற்றம், வாள்போர், வில்பயிற்சி ஆகியவற்றைக் கற்றுக்கொண்டார். அவர் சிவகங்கை மன்னர் முத்துவடுகநாதரை மணந்துகொண்டார். காளையார் கோவிலில் நடைபெற்ற போரில் முத்துவடுகநாதர் ஆங்கிலப் படையுடன் போரிட்டு வீரமரணம் அடைந்தார். வேலுநாச்சியார் ஆங்கிலேயரை வென்று சிவகங்கையை மீட்க உறுதி பூண்டார். திண்டுக்கல் கோட்டையில் தங்கி ஒரு படையைத் திரட்டிப் பயிற்சி அளித்தார்.

### காட்சி 1

**இடம் :** திண்டுக்கல் கோட்டை

**பங்கேற்போர் :** வேலுநாச்சியார், தாண்டவராயர் (அமைச்சர்), பெரியமருது-சின்னமருது (தளபதிகள்) மற்றும் குறுநில மன்னர்கள்.

*(திண்டுக்கல் கோட்டையில் ஆலோசனைக் கூட்டம் ஒன்று நடந்தது.)*

**வேலுநாச்சியார்** : நாம் சிவகங்கையை இழந்து எட்டு ஆண்டு ஆகிவிட்டன.

**தாண்டவராயர்** : கவலைப்படாதீர்கள் அரசியாரே! நாம் சிவகங்கையை மீட்கும் நாள் நெருங்கிவிட்டது.

**வேலுநாச்சியார்** : அந்த இனிய நாளைத்தான் நானும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறேன். (அப்போது வெளியே பெரும் ஆரவாரம் கேட்டது.) மைசூரிலிருந்து ஐதர்அலி அனுப்பிய படை வந்துவிட்டது என நினைக்கிறேன்.

**வீரன்** : அரசியாருக்கு வணக்கம். மைசூரிலிருந்து ஐயாயிரம் குதிரைப் படை வீரர்கள் வந்துள்ளனர்.

**வேலுநாச்சியார்** : அப்படியா! மகிழ்ச்சி. அவர்களை ஓய்வு எடுக்கச் சொல். நான் பிறகு வந்து பார்க்கிறேன்.

**தாண்டவராயர்** : ஐதர்அலி உறுதியாகப் படையை அனுப்புவார் என்று எனக்கு முன்பே தெரியும் அரசியாரே!

**வேலுநாச்சியார்** : எதனால் அப்படிச் சொல்கிறீர்கள்?

**தாண்டவராயர்** : நாம் இருவரும் ஐதர்அலியைச் சந்திக்க மைசூர் சென்றோம் அல்லவா? அப்போது தாங்கள் அவரிடம் உருதுமொழியில் பேசினீர்கள். அப்போது அவர் முகத்தில் பெரிய மகிழ்ச்சி தோன்றியதை நான் கண்டேன்.

**சின்னமருது** : நம் அரசியாரின் பன்மொழி அறிவு நமக்குப் பெரிய நன்மையைத் தந்திருக்கிறது.

**பெரிய மருது** : ஆம். நமது வீரர்களுடன் ஐதர்அலியின் ஐயாயிரம் குதிரைப்படை வீரர்களும் சேர்ந்து விட்டனர். ஆகவே, நாளை சிவகங்கையை மீட்கப்புறப்படலாம் அல்லவா?

**வேலுநாச்சியார்** : என் கணவர் கொல்லப்பட்ட ஊர் காளையார்கோவில். எனவே, நாம் முதலில் காளையார்கோவிலைக் கைப்பற்றுவோம். பிறகு சிவகங்கையை மீட்போம்.

மறுநாள் காளையார்கோவிலை நோக்கி வேலுநாச்சியார் படை புறப்பட்டது. ஆண்கள் படைப்பிரிவுக்கு மருது சகோதரர்களும், பெண்கள் படைப்பிரிவுக்குக் குயிலியும் தலைமை ஏற்றனர். காளையார் கோவிலில் வேலுநாச்சியாரின் படைக்கும் ஆங்கிலேயரின் படைக்கும் இடையே கடுமையான போர் நடைபெற்றது. இறுதியில் ஆங்கிலேயரின் படை தோற்று ஓடியது.

### காட்சி 2

**இடம்** : காளையார்கோவில்

**பங்கேற்போர்** : வேலுநாச்சியார், தாண்டவராயர் (அமைச்சர்), பெரியமருது-சின்னமருது (தளபதிகள்) மற்றும் குறுநில மன்னர்கள்.

**பெரிய மருது** : அரசியார் அவர்களே! காளையார்கோவில் நம் கைக்கு வந்துவிட்டது. நாம் இப்போதே சிவகங்கைக் கோட்டையைத் தாக்கினால் ஆங்கிலேயரை விரட்டியடித்து விடலாம்.

**வேலுநாச்சியார்** : அவசரம் வேண்டாம். இப்போது சிவகங்கைக் கோட்டைக் கதவுகள் அடைக்கப்பட்டிருக்கும். வரும் விசயதசமித் திருநாள் அன்று கதவுகள் திறக்கப்படும். அப்போது நமது படைகள் உள்ளே நுழையலாம்.

**சின்ன மருது** : அப்போதும் பெரிய காவல் இருக்குமே

**வேலுநாச்சியார்** : விசயதசமி நாளில் கோட்டைக்குள் செல்வதற்குப் பெண்களுக்கு மட்டும் அனுமதி உண்டு. நமது பெண்கள் படைப்பிரிவினர் கூடைகளில் பூக்கள், பழங்கள் ஆகியவற்றுடன் ஆயுதங்களையும் மறைத்துக் கொண்டு கோட்டைக்குள் செல்லட்டும். உள்ளே அவர்கள் தாக்குதலைத் தொடங்கியதும் நமது ஆண்கள் படைப்பிரிவினரும் கோட்டைக்குள் நுழைந்து தாக்கட்டும். ஆங்கிலேயரை விரட்டியடித்து விடலாம்.

**தாண்டவராயர்** : அப்படியே செய்யலாம் அரசியாரே! இன்னும் ஒரு செய்தி. தங்களைக் காட்டிக் கொடுக்குமாறு உடையாள் என்னும் பெண்ணை ஆங்கிலேயர்கள் வற்புறுத்தினார்களாம். அவர் மறுத்ததால் கொன்றுவிட்டார்களாம். அவருக்கு நாம் உரிய முறையில் சிறப்புச் செய்ய வேண்டும்.

**வேலுநாச்சியார்** : அவருக்கு ஒரு நடுகல் நடுவதற்கு ஏற்பாடு செய்யுங்கள் அமைச்சரே! அவரது பெருமையை எல்லோரும் அறிந்து கொள்ளட்டும்.

**தாண்டவராயர்** : அப்படியே செய்வோம்!

விசயதசமிக்கு முதல் நாள் சிவகங்கையை நோக்கிப் புறப்பட்டது படை. வழியில் உடையாளுக்காக நடப்பட்ட நடுகல் முன்பு குதிரையில் இருந்து இறங்கினார் வேலுநாச்சியார். தாம் வைத்திருந்த தாலியை எடுத்து அந்த நடுகல்லுக்குக் காணிக்கையாகச் செலுத்தி வணங்கினார். அருகில் நின்ற வீரர்கள் "உடையாள் புகழ் ஓங்குக" என்று முழக்கமிட்டனர்.
படை மறுநாள் காலை சிவகங்கையை அடைந்தது.

## காட்சி 3

**இடம்** : காளையார்கோவில்

**பங்கேற்போர்** : வேலுநாச்சியார், குயிலி, வீரர்கள்.

**குயிலி** : அரசியாரே! நான் நமது பெண்கள் படைப்பிரிவுடன் மாறுவேடத்தில் உள்ளே செல்கிறேன். உள்ளே சென்றதும் அங்குள்ள ஆயுதக் கிடங்குக்கு எப்படியாவது தீ வைத்து விடுகிறேன். தீ எரிவது தெரிந்ததும் நம் படை உள்ளே நுழையட்டும்.

**வேலுநாச்சியார்** : அப்படியே ஆகட்டும்.

*(குயிலியும் பெண்கள் படையினரும் கோட்டைக்குள் சென்றனர். சிறிது நேரத்தில் கோட்டைக்குள் பெரும் கூச்சல் எழுந்தது. உள்ளே உயரமாகத் தீ எரிவது தெரிந்தது.)*

**வேலுநாச்சியார்** : நமது படை உள்ளே நுழையட்டும்.

*(படை வீரர்கள் கோட்டைக்குள் பாய்ந்து சென்றனர். ஆங்கிலேயரின் படையுடன் கடுமையாகப் போரிட்டனர். இறுதியில் ஆங்கிலப்படை தோல்வியடைந்து கோட்டையைவிட்டு ஓடியது. "வெற்றி வெற்றி!" என்று முழக்கமிட்டனர் வீரர்கள்.)*

**வேலுநாச்சியார்** : இந்த வெற்றிக்குக் காரணமான குயிலி எங்கே?

**வீரர்கள்** : குயிலி தம் உடலில் தீ வைத்துக் கொண்டு ஆயுதக் கிடங்குக்குள் குதித்துவிட்டார்.

**வேலுநாச்சியார்** : குயிலி தம் உயிரைத் தந்து நம்நாட்டை மீட்டுக் கொடுத்திருக்கிறார். அவரது துணிவுக்கும் தியாகத்திற்கும் வீரத்திற்கும் தலைவணங்குகிறேன்.

*வேலுநாச்சியாரின் வீரம், மருது சகோதரர்களின் ஆற்றல், ஐதர்அலியின் உதவி ஆகியவற்றோடு குயிலியின் தியாகமும் இணைந்ததால் சிவகங்கை மீட்கப்பட்டது.*

# கற்கண்டு : நால்வகைச் சொற்கள்

## மதிப்பீடு

**சொல்வகையை அறிந்து பொருந்தாச் சொல்லை வட்டமிடுக.**

| | | | |
|---|---|---|---|
| 1. அ) படித்தாள் | ஆ) ஐ | இ) மற்று | ஈ) கு |
| 2. அ) மதுரை | ஆ) கால் | இ) சித்திரை | ஈ) ஓடினான் |
| 3. அ) சென்றாள் | ஆ) வந்த | இ) சித்திரை | ஈ) நடந்து |
| 4. அ) மா | ஆ) ஐ | இ) உம் | ஈ) மற்று |

**குறுவினாக்கள்**

**1. சொல் என்றால் என்ன?**

தமிழில் சில எழுத்துகள் தனித்து நின்று பொருள் தரும். ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துகள் தொடர்ந்து வந்தும் பொருள் தரும். இவ்வாறு பொருள் தருபவை சொல் எனப்படும்.

**2. சொற்களின் வகைகளை எழுதுக.**

இலக்கண அடிப்படையில் சொற்கள் நான்கு வகைப்படும். அவை,

- பெயர்ச்சொல்
- வினைச்சொல்
- இடைச்சொல்
- உரிச்சொல்

**3. பெயரையும் வினையையும் சார்ந்து வரும் சொற்களை எவ்வாறு வழங்குகிறோம்?**

பெயர்ச்சொல்லையும், வினைச்சொல்லையும் சார்ந்து வரும் சொல் இடைச்சொல் என்கிறோம்.

எ.கா. ஐ - திருக்குறளை

## கற்பவை கற்றபின்

**பின்வரும் தொடர்களில் உள்ள நால்வகைச் சொற்களை வகைப்படுத்துக.**

**1. வளவனும் தங்கையும் மாநகரப் பேருந்தில் ஏறினர்.**

| | | |
|---|---|---|
| வளவனும் | - **வளவன்** | - **பெயர்ச்சொல்** |
| வளவனும் தங்கையும் | - **உம்** | - **இடைச்சொல்** |
| மாநகரப் | - **மா** | - **உரிச்சொல்** |
| பேருந்தில் | - **பேருந்து** | - **பெயர்ச்சொல்** |
| ஏறினர் | - **ஏறுதல்** | - **வினைச்சொல்** |

**2. நாள்தோறும் திருக்குறளைப் படி.**

| | | |
|---|---|---|
| நாள்தோறும் | - **நாள்** | - **பெயர்ச்சொல்** |
| நாள்தோறும் | - **உம்** | - **இடைச்சொல்** |
| திருக்குறளைப் | - **திருக்குறள்** | - **பெயர்ச்சொல்** |
| திருக்குறளைப் | - **ஐ** | - **இடைச்சொல்** |
| படி | - **படித்தல்** | - **வினைச்சொல்** |

3. **‘ஏழைக்கு உதவுதல் சாலச்சிறந்தது’ என்றார் ஆசிரியர்.**

| | | |
|---|---|---|
| ஏழைக்கு | - ***ஏழை*** | - ***பெயர்ச்சொல்*** |
| ஏழைக்கு | - ***கு*** | - ***இடைச்சொல்*** |
| உதவுதல் | - ***உதவி*** | - ***வினைச்சொல்*** |
| சாலச்சிறந்தது | - ***சால*** | - ***உரிச்சொல்*** |
| ஆசிரியர் | - ***ஆசிரியர்*** | - ***பெயர்ச்சொல்*** |

**கீழ்க்காணும் குறளில் உள்ள இடைச்சொல்லை எழுதுக.**

மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றுஅவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு.

***இடைச்சொல் - மற்று, கு***

**செய்தித்தாளில் விளையாட்டுச் செய்தி ஒன்றைப் படித்து, அதில் இடம்பெற்றுள்ள நால்வகைச் சொற்களை எழுதுக.**

இந்தியா-இலங்கை இடையிலான உலக கோப்பை இறுதி ஆட்டத்தில் யுவராஜ்சிங்கிற்கு முன்பாக இறங்கி 91 ரன்கள் அடித்து இந்தியாவை வெற்றி பெற செய்த தோனியின் செயல் சாலச் சிறந்த ஆட்டம் என கிரிக்கெட் வல்லுநர்கள் கூறுகிறார்கள்.

1. இந்தியா, இலங்கை, யுவராஜ் சிங், தோனி - பெயர்ச்சொல்
2. ஆட்டம், அடித்தது, செயல் - வினைச்சொல்
3. இடையிலான - இடைச்சொல்
4. சாலச் சிறந்த - உரிச்சொல்

## மொழியை ஆள்வோம்!

**கீழ்க்காணும் தலைப்புகளில் ஒரு நிமிடம் பேசுக.**

**1. பாரதியார் 2. காந்தியடிகள் 3. வேலுநாச்சியார்**

***1. பாரதியார்***

* பாரதியார், சுப்பையா, முண்டாசுக் கவிஞன், மகாகவி என்ற பெயர்களிலெல்லாம் அழைக்கப்பட்டார் சுப்பிரமணிய பாரதியார், எட்டயபுரத்தில் 1882ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் பதினோராம் நாள் சின்னச்சாமி - இலட்சுமி தம்பதிக்கு மகனாகப் பிறந்தார்.
* பாரதியார் ஒரு கவிஞர், எழுத்தாளர், விடுதலை வீரர், பத்திரிக்கையாசிரியர் மற்றும் சமூக சீர்திருத்தவாதி, நவீனத் தமிழ்க் கவிதைக்கு முன்னோடி ஆவார்.
* தனது பதினொன்றாம் வயதில் பள்ளியில் படித்து வரும்பொழுதே கவி புனையும் ஆற்றலை வெளிப்படுத்தினார். 15 வயதில் தனது அத்தையுடன் காசிக்குச் சென்றார். இந்துக் கலாசாலையில் சமஸ்கிருதம், இந்தி மொழிகளும் கற்றார். பன்மொழி படித்து, வேத உபநிடதங்கள் படித்தார். ஆங்கிலத்திலும் தமிழிலும் புலமைப் பெற்றார். தம் தாய்மொழியாம் தமிழின் மீது அளவு கடந்த அன்பு கொண்டவர். பாரதியார், “யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவ தெங்கும் காணோம்” எனப் பாடியுள்ளார்.
* தன்னுடைய தாய்நாட்டை நினைத்து பெருமைப்பட்டவர். தன்னுடைய தீராத சுதந்திர தாகத்தைத் தணிக்க 1905ஆம் ஆண்டு முதல் அரசியலில் ஆர்வம் காட்டினார். பாரதியாருக்கு கப்பல் ஓட்டிய தமிழன் வ.உ.சிதம்பரம் பிள்ளையுடன் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது.

கல்கத்தாவில் சுவாமி விவேகானந்தரின் சிஷ்யை நிவேதிக்க தேவியைச் சந்தித்தார். அவரைத் தம் ஞானகுருவாக ஏற்றுக் கொண்டார்.

- இந்தியா என்னும் வார ஏட்டையும், பால பாரதம் என்ற ஆங்கில இதழையும் பொறுப்பேற்று நடத்தினார்.
- பாரதியார் மொழி, இனம், நாடு, சமுதாயம் என்னும் அனைத்துத் துறைகளையும் விடுதலை விழிகளாகப் பார்த்தார். அவருடைய பேச்சு, மூச்சு, செயல் அனைத்துமே விடுதலையாகவும் அதைச் சார்ந்த சமுதாய விடுதலையாகவும் அமைந்தது.

### *2. காந்தியடிகள்*

- இந்திய விடுதலைப் போராட்டத்தைத் தலைமையேற்று நடத்திய மாபெரும் சுதந்திரப் போராட்ட வீரர் காந்தியடிகள். இவர் 'மகாத்மா காந்தி' என்று அன்போடு அழைக்கப்பட்டவர்.
- மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி 1869ஆம் ஆண்டு அக்டோபர் இரண்டாம் நாள் குஜராத் மாநிலம் போர்பந்தரில் பிறந்தார். பெற்றோர் காபாகாந்தி-புத்திலிபாய் ஆவர்.
- காந்தி பள்ளிப் பருவத்திலேயே நேர்மையாளராகத் திகழ்ந்தார். அவர் அரிச்சந்திரன் நாடகத்தைப் பார்த்தார். வாய்மையாளராய் விளங்கினார். 'சிரவண பிதுர்பத்தி என்னும் நூலைப் படித்தார். பெற்றோரை மதிக்கும் குணம் பெற்றார். பதினெட்டு வயதில் இங்கிலாந்து சென்றார். வழக்கறிஞர் கல்வியை முடித்துத் திரும்பினார்.
- தென் ஆப்பிரிக்கா சென்றார். டர்பன் நகரிலுள்ள நீதிமன்றத்தில் தலைப்பாகை அணிந்து வாதாடக்கூடாது எனப் புறக்கணிக்கப்பட்டதும், இரயிலில் முதல் வகுப்பில் பயணம் செய்தபோது, வெள்ளையர் இல்லை என்ற காரணத்தால் பயணம் செய்ய மறுக்கப்பட்ட நிகழ்வும் அவருடைய மனதில் மாற்றத்தை ஏற்படுத்தியது.
- தென் ஆப்பிரிக்காவில் கருப்பின மக்கள் மற்றும் அங்கு குடியேறிய இந்திய மக்கள் படும் இன்னல்கள் அவரை மாற்றியது. தென் ஆப்பிரிக்காவில் போராடிய போது தில்லையாடி வள்ளியம்மை இவருக்கு அறிமுகமானார்.
- காந்தியடிகள் பலமுறை தமிழ்நாட்டிற்கு வந்துள்ளார். அவ்வாறு வந்தபோது – புகைவண்டியில் மதுரைக்குச் சென்றார். செல்லும் வழியில் பெரும்பாலான மக்கள் இடுப்பில் ஒரு துண்டு மட்டுமே அணிந்து இருப்பதைக் கண்டார். இந்திய மக்கள் போதிய உடைகள் இல்லாமல் இருப்பதைப் பற்றிச் சிந்தித்தார். அதனால் ஏற்பட்ட மாற்றமே காந்தியடிகளின் எளிமைத் திருக்கோலம் ஆகும்.
- விடுதலை பெறுவதற்காக அவர் கண்ட புதுவழி அறவழி. 'கத்தியின்றி இரத்தமின்றி' புதிய அகிம்சை வழியில் போராடினார். ஒத்துழையாமை இயக்கம், தண்டி யாத்திரை, வெள்ளையனே வெளியேறு இயக்கம், தனியாள் அறப்போராட்டம் எனப் பல வழிகளில் விடுதலைக்குப் போராடி விடுதலை பெற்றுத் தந்தார்.
- அறவழி (அகிம்சை) என்றால் காந்தியடிகளே நம் நினைவிற்கு வருவார். அப்படிப்பட்ட ஒரு தலைவர் நாதுராம் கோட்சே என்ற கொடியவனால் 1948, சனவரி 30ஆம் நாள் கொல்லப்பட்டார். பாரதத் தாய்க்காகத் தன் இன்னுயிரையும் தந்து அனைவரின் மனதிலும் வாழ்கிறார்.

### 3. *வேலுநாச்சியார்*

- ✱ ஆங்கிலேயரை எதிர்த்து ஆயுதம் ஏந்திப் போராடிய முதல் பெண்மணி வேலு நாச்சியார்.
- ✱ இராமநாதபுரத்தை ஆண்ட மன்னர் செல்லமுத்து சேதுபதி – சக்கந்தி முத்தாத்தாள் இணையருக்குக் கி.பி. 1730ஆம் ஆண்டு ஒரே பெண் மகளாகத் தோன்றியவர்தான் வேலுநாச்சியார். இவர் ஆண்களைப் போல வளர்க்கப்பட்டார். ஆயுதப் பயிற்சி முதல் அனைத்துப் பயிற்சியையும் கற்றுத் தேர்ந்தவர். இவர் சிவகங்கையை ஆண்ட மன்னரான முத்துவடுகநாதரை மணந்து கொண்டார்.
- ✱ ஆங்கிலேயர் 1772ஆம் ஆண்டு சிவகங்கைச் சீமையின் மீது படையெடுத்தனர். ஆங்கிலேயருக்கும் முத்துவடுகநாதருக்கும் இடையே போர் நடைபெற்றது. அப்போரில், மன்னர் முத்துவடுகநாதர் வீர மரணமடைந்தார். வேலுநாச்சியார், மைசூர் மன்னர் ஐதர் அலியைச் சந்தித்து, ஆங்கிலேயரை எதிர்ப்பது குறித்துக் கலந்து பேசினார். அவருக்கு உதவ விரும்பிய ஐதர்அலி ஐயாயிரம் படைவீரர்களை அவருடன் அனுப்பினார்.
- ✱ மருது சகோதரர்களுடன் வீரர்படைக்குத் தலைமையேற்றுச் சென்ற வேலுநாச்சியார் ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்டார். ஒரு விஜயதசமி நாளில் இப்போர் நடந்தது. அப்போரில், கணவரைக் கொன்றவர்களை வென்று 1780ஆம் ஆண்டில் சிவகங்கையை மீட்டார்.

## சொல்லக் கேட்டு எழுதுக.

| | | | | |
|---|---|---|---|---|
| இந்தியநாடு | காந்தியடிகள் | ஊன்றுகோல் | வேலுநாச்சியார் | வாழ்த்துகள் |
| மெய்யுணர்வு | நாற்றங்கால் | உரிச்சொல் | பொதுக்கூட்டம் | குற்றாலம் |

## கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

இந்திய விடுதலைக்குப் பாடுபட்டவர்களுள் ஒருவர் வ.உ.சிதம்பரனார். வ.உ.சி. அவர்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் புலமை பெற்றிருந்தார். அவர், வழக்கறிஞர், எழுத்தாளர், பேச்சாளர், தொழிற்சங்கத் தலைவர் என்னும் பன்முகத்தன்மை பெற்றிருந்தார். ஆங்கிலேயரின் கப்பல்களுக்குப் போட்டியாக உள்நாட்டு இந்தியக் கப்பல் நிறுவனத்தைத் தொடங்கியவர். 1906 ஆம் ஆண்டு அக்டோபர் 16ஆம் நாள் “சுதேசி நாவாய்ச் சங்கம்” என்ற கப்பல் நிறுவனத்தைப் பதிவு செய்தார். வ.உ.சி. சென்னைக்குச் செல்லும்போது பாரதியாரைச் சந்திப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். மேலும், பாரதியார் பாடல்களை விரும்பிக் கேட்டார்.

1. சுதேசி நாவாய்ச் சங்கத்தை நிறுவியவர் யார்? ***வ.உ.சிதம்பரனார்.***
2. வ.உ.சி. சென்னைக்குச் செல்லும்போது யாரைச் சந்திப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார்?
   வ.உ.சி. சென்னைக்குச் செல்லும்போது ***பாரதியாரைச்*** சந்திப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.
3. வ.உ.சி. அவர்கள் யாருடைய பாடல்களை விரும்பிக் கேட்பார்?
   வ.உ.சி. அவர்கள் ***பாரதியாருடைய*** பாடல்களை விரும்பிக் கேட்பார்.
4. வ.உ.சி. அவர்களின் பன்முகத் தன்மைகள் யாவை?
   வ.உ.சி. அவர்கள் ***வழக்கறிஞர், எழுத்தாளர், பேச்சாளர், தொழிற்சங்கத் தலைவர்*** என்னும் பன்முகத்தன்மை பெற்றிருந்தார்.
5. வ.உ.சி. அவர்கள் புலமை பெற்றிருந்த மொழிகள் யாவை?
   வ.உ.சி. அவர்கள் ***தமிழிலும் ஆங்கிலத்திலும்*** புலமை பெற்றிருந்தார்.

## இடம் அறிந்து பயன்படுத்துவோம்.

ஒன்று என்பதைக் குறிக்க ஓர், ஒரு ஆகிய இரண்டு சொற்களும் பயன்படுகின்றன. உயிரெழுத்தில் தொடங்கும் சொல்லுக்கு முன் ஓர் என்னும் சொல்லைப் பயன்படுத்த வேண்டும். உயிர்மெய்யெழுத்தில் தொடங்கும் சொல்லுக்கு முன் ஒரு என்னும் சொல்லைப் பயன்படுத்த வேண்டும்.

**(எ.கா.)** **ஓர்** ஊர் **ஓர்** ஏரி
**ஒரு** நகரம் **ஒரு** கடல்

இவை போலவே, உயிரெழுத்தில் தொடங்கும் சொல்லுக்கு முன் அஃது என்னும் சொல்லைப் பயன்படுத்த வேண்டும். உயிர்மெய்யெழுத்தில் தொடங்கும் சொல்லுக்கு முன் அது என்னும் சொல்லைப் பயன்படுத்த வேண்டும்.

**(எ.கா.)** **அஃது** இங்கே உள்ளது
**அது** நன்றாக உள்ளது

## கீழ்க்காணும் தொடர்களில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக.

1. ஒரு அழகிய சிற்றூரில் ஓர் குளம் இருந்தது. - **ஓர்** அழகிய சிற்றூரில் **ஒரு** குளம் இருந்தது.
2. ஒரு இரவும் ஓர் பகலும் சேர்ந்தது ஒருநாள். - **ஓர்** இரவும் **ஒரு** பகலும் சேர்ந்தது ஒரு நாள்.
3. அது இல்லாத இடத்தில் எதுவும் நடக்காது. - **அஃது** இல்லாத இடத்தில் எதுவும் நடக்காது.
4. அஃது நகரத்திற்குச் செல்லும் சாலை. - **அது** நகரத்திற்குச் செல்லும் சாலை.
5. அது ஒரு இனிய பாடல். - **அஃது ஓர்** இனிய பாடல்.

## அகரவரிசைப்படுத்துக.

*பெண்கள், பாரதம், புதுமை, பீலி, பேருந்து, பூமி, பழங்கள், பொதுக்கூட்டம், பையன், போக்குவரத்து, பின்னிரவு*

பழங்கள் பாரதம் பின்னிரவு பீலி புதுமை பூமி பெண்கள்
பேருந்து பையன் பொதுக்கூட்டம் போக்குவரத்து

## செயல்திட்டம்


**காந்தியடிகளின் விடுதலைப் போராட்ட நிகழ்வுகள் பற்றிய படங்களைத் திரட்டிப் படத்தொகுப்பு ஒன்று உருவாக்குக.**



ஒத்துழையாமை இயக்கம்



இந்து மத எதிர்ப்பு



தில்லி நோக்கி புறப்படுங்கள்



உப்பு சத்தியாகிரகம்



உண்ணா நிலை போராட்டம்



அரசியல் தாக்கங்கள்

**கீழ்க்கானும் தலைப்பில் கட்டுரை எழுதுக.**

## தேசிய ஒருமைப்பாடு

**முன்னுரை**

பாரத தேசம் பண்டை பெரும் புகழ் கொண்ட தேசமாகும். "வந்தே மாதரம்" என்று பாடிய வங்காள கவிஞன் பக்கிம் சந்திர சட்டர்ஜி இந்திய தேசத்து மக்களை ஒன்று பட செய்தான். பல கோடி மக்கள் வாழும் இந்திய நாடு உலகின் அதிக இளைஞர்கள் வாழும் நாடாகும். தலை சிறந்த கலை, இலக்கியம், அறிவியல் பண்பாடுகளைக் கொண்ட இந்திய தேசம் நாட்டுப்பற்று மிக்க பிரஜைகளால் உருவானது. "ஒன்று பட்டால் உண்டு வாழ்வு" என்பார்கள் அது போல் இந்தியர்கள் தேசபக்தி எனும் உணர்வால் ஒன்றுபட்டவர்கள். அந்நியர்கள் பாரதத்தை ஆக்கிரமித்தாலும் கூட தமது தேச ஒருமைப்பாட்டால் சுதந்திரம் அடைந்தார்கள். இக்கட்டுரையில் இந்திய ஒருமைப்பாடு பற்றி பார்க்கலாம்.

**ஒருமைப்பாடு வளர்ப்போம்!**

ஒரு நாடு நல்வழியில் செல்ல வேண்டுமாயின் அந்நாட்டு மக்கள் ஒற்றுமையுடையவர்களாக இருக்கும் போது தான் அது சாத்தியமாகும். பிரிவினைகள் உருவாகினால் அந்நாட்டில் சண்டைகள் பிரச்சனைகள் என நாடு அமைதியற்றதாகவும் மக்கள் வாழமுடியாத இடமாக மாறிவிடும். இந்தியர்கள் பல மொழிகளை பேசி பல மதங்களை பின்பற்றி பல்வேறு கலாச்சார பின்னணிகளைக் கொண்டவர்களாக இருப்பதனால் இதனை பயன்படுத்தி அரசியல் இலாபம் தேடும் அரசியல்வாதிகள் மக்களை பிரிவினைப்படுத்த முயல்கின்றனர். இவற்றை விடுத்து மக்கள் ஒன்றுபடவேண்டும். இப்பரந்த இந்திய தேசத்தில் எல்லா வளங்களும் உள்ளன. ஆனால், இன்றும் இத்தேசத்தில் ஒரு சாரார் வறுமையில் வாடுகிறார்கள். ஒரு வேளை உணவுக்குக் கூட சிரமப்படுகிறார்கள். இதற்குக் காரணம் அரசாங்கத்தின் தவறான அணுகுமுறைகளும் மக்களின் ஒருமைப்பாடற்ற செயல்பாடுகளும் ஆகும். நீதியைக் கொல்பவர்களை மீண்டும் மீண்டும் ஆட்சியில் அமர்த்துவதே இம்மக்கள் செய்யும் தவறாகும். மக்கள் ஒருமைப்பட்டு தகுதியான தலைவர்களைத் தெரிவு செய்வதனால் இந்த நிலை மாறும்.

**பிரிவினைகளும் பின்னடைவும் :**

இந்தியாவில் சிறந்த அறிவார்ந்த மக்கள் இருக்கின்றனர். அதே சமயம், முட்டாள்களும் இருக்கவே செய்கின்றனர். உலகின் பெரும் பணக்காரர்கள் இருக்கும் அதேநேரம் அதிக ஏழைகளும் இங்கு தான் உள்ளனர். இந்தியாவின் அரசியல் இன்று மோசமாக மாறி போயுள்ளது. கல்வியறிவே இல்லாமல் பண பலத்தால் அரசியலில் உயர் பதவிகளுக்கு சிலர் வருகின்றனர். இவர்கள் மக்களை இனம், மதம், மொழி, சாதி என பிரிவினைகளை உருவாக்கி இலவசங்களை கொடுத்து மக்களின் வாக்குகளைப் பணம் கொடுத்து வாங்கும் கலாச்சாரம் இந்தியாவில் உள்ளது. இவ்வாறான பிரிவினைகளால் உள்நாட்டில் மாநிலங்களுக்கிடையிலான கலவரங்கள் முரண்பாடுகள் தோன்றுகின்றன.

கல்வி, மருத்துவம், போக்குவரத்து ஆகிய முக்கிய துறைகளில் தவறான தனியார்களின் அதிகாரங்கள் இந்திய மக்களை மோசமாக பாதிக்கின்றது. திறமை இருந்தும் விரும்பிய கல்வியை கற்கவும் நல்ல மருத்துவ சேவைகளைப் பெறவும் நீதியைப் பெற கூட லஞ்சம், பணபலம் என்பன அவசியம் ஆகி விட்டன. இந்நிலைமை இந்தியாவின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இருக்கின்றது.

**இன்றைய பாரதம் :**

இந்தியாவில் உள்ள ஒவ்வொரு மாநிலங்களும் சுயநல போக்கை மறந்து செயல்பட்டால் மட்டுமே ஒருமைப்பாட்டை உருவாக்க இயலும். "தண்ணீரை, மின்சாரத்தை பங்கிட்டுவதில் மாநிலங்களுக்கிடையே வேறுபாடு நிலவுவது இன்றைய பாரதத்தின் வளர்ச்சிக்கு வழி கோலாது. ஒவ்வொரு மாநிலமும் மற்ற மாநிலங்களை மதித்து நட்புறவை வளர்த்து கொண்டால் மட்டுமே வளமான பாரதத்தை நம்மால் உருவாக்க இயலும்.

**வேற்றுமையுள் ஒற்றுமை :**

28 மாநிலங்கள், 8 யூனியன் பிரதேசங்கள், பல மதங்கள், பல இனங்கள், பல்வேறு சாதிப்பிரிவுகள், மொழியால், மதத்தால், இனத்தால், சாதியால் பிரிந்தாலும் இந்தியர் என்ற உணர்வால் ஒன்றுபட்டிருக்கிறோம். வேற்றுமையில் ஒற்றுமையைக் கண்டு உலகநாடுகள் வியக்கின்றன இந்நேரத்தில் நாட்டு மக்களுக்கு உள்ளேயும் இவ்வுணர்வு மிளிர்ந்தால், நாட்டில் தேசிய ஒருமைப்பாடு செழித்தோங்கும்.

**முடிவுரை :**

அற்புதமான கலை, கலாச்சாரம், அழகியல் போன்றனவற்றுக்குச் சொந்தமான இந்திய தேசம் பல பெருமைகளையும் தன்னகத்தே கொண்ட இந்தியா உலகளவில் சிறந்த நாடாக வர வேண்டும் என்பது தேசப்பற்று கொண்ட இந்தியர்களின் கனவாகும். “டாக்டர் அப்துல்கலாம்” அவர்கள் இந்திய தேசம் இளைஞர்களால் தலைநிமிரும் என்று நம்பினார். அதனால்தான், அடுத்த தலைமுறை குழந்தைகளை நாடி சென்று அவர்களுக்கு கல்வி எனும் ஆயுதத்தால் தான் இந்தியாவின் எதிர்காலம் மாறும் என மாணவர்களிடம் உற்சாகத்தையும் நம்பிக்கையையும் விதைத்தார்.

“தாயே உன் பெயர் சொல்லும் போது இதயத்தில் மின்னலை பாயுமே இனிவரும் காலம் இளைஞர்கள் காலம் ஏழ்கடல் மெல்லிசை பாடுதே” என்று உணர்ச்சி பொங்க தேச உணர்வை “கவிப்பேரரசு வைரமுத்து” பாடுகிறார். அபூர்வமான இந்திய தேசம் அங்குள்ள மக்களின் ஒருமைப்பட்டால் என்றேனும் ஓர் நாள் தலைநிமிரும் என்பதில் ஐயமில்லை.

# மொழியோடு விளையாடு

**இரண்டு சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.**

| | | | |
|---|---|---|---|
| **(எ.கா.) எனக்கு** | | **எனக்குண்டு** | **எனக்கில்லை** |
| வடக்கு | | **வடக்குண்டு** | **வடக்கில்லை** |
| பந்து | உண்டு | **பந்துண்டு** | **பந்தில்லை** |
| பாட்டு | இல்லை | **பாட்டுண்டு** | **பாட்டில்லை** |

**கட்டங்களில் உள்ள சொற்களைக் கொண்டு தொடர்கள் உருவாக்குக.**

| | | | |
|---|---|---|---|
| பாரி | | வந்தன | **பாரி வீட்டுக்கு வந்தான்.** |
| எழிலி | | வந்தான் | **எழிலி வீட்டுக்கு வந்தாள்.** |
| மாணவர்கள் | வீட்டுக்கு | வந்தது | **மாணவர்கள் வீட்டுக்கு வந்தார்கள்.** |
| மாடு | | வந்தார்கள் | **மாடு வீட்டுக்கு வந்தது.** |
| மாடுகள் | | வந்தாள் | **மாடுகள் வீட்டுக்கு வந்தன.** |

**கட்டங்களில் மறைந்துள்ள நால்வகைச் சொற்களை எழுதுக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கு | ம் | பே | சி | வ | ன் |
| ம | ர | ரு | ப | ண் | தா |
| ர | க | ந் | று | டி | ய் |
| ன் | ந | து | உ | ம் | செ |
| ஐ | மா | டு | ம | ற் | று |
| ந | ட | க் | கி | றா | ள் |

**எ.கா:** குமரன் - பெயர்ச்சொல்

**பெயர்ச்சொல்** - சிவன், பேருந்து, மாடு, வண்டி, தாய், கரம், பண், நகரம், செறு.

**வினைச்சொல்** - நடக்கிறாள், செய்தான்.

**இடைச்சொல்** - கு, ஐ, உம், மற்று, தான்.

**உரிச்சொல்** - மாநகரம், உறு.

## நிற்க அதற்குத் தக...

### என் பொறுப்புகள்...

1. தாய் தந்தையின் வீட்டு வேலைகளில் என்னால் முடிந்த உதவிகளைச் செய்வேன்.
2. பள்ளி, பொது இடங்களில் உள்ள பொருட்களை உடைக்காமல் பாதுகாப்பேன்.
3. தமிழ்த்தாய் வாழ்த்து, நாட்டுப்பண், தேசியக்கொடி முதலியவற்றிற்கு உரிய மரியாதை தருவேன்.
4. என்னால் முடிந்த உதவிகளைப் பிறருக்குச் செய்வேன்.
5. பள்ளி, வீடு, பொது இடங்களைச் சுத்தமாக வைத்துக் கொள்வேன்.

### கலைச்சொல் அறிவோம்.

| | |
|---|---|
| நாட்டுப்பற்று | - Patriotism |
| கலைக்கூடம் | - Art Gallery |
| இலக்கியம் | - Literature |
| மெய்யுணர்வு | - Knowledge of Reality |

### இணையத்தில் காண்க.

**விடுதலைப் போராட்டத்தில் கலந்துகொண்ட தமிழகத் தலைவர்கள் பற்றிய செய்திகளை அறிக.**

***ம.சிங்காரவேலர்:*** தமிழ்நாட்டில் பொதுவுடைமைச் சிந்தனைகளை முதலில் பரப்பிய 'சிந்தனைச் சிற்பி' ம.சிங்காரவேலர் (1860-1946), விடுதலைப் போராட்டத்திலும் தீவிரமாகப் பங்கேற்றவர். ஜாலியன் வாலாபாக் படுகொலையை எதிர்த்து ஒத்துழையாமை இயக்கத்தை காந்தி அறிவித்தபோது, வழக்கறிஞராக இருந்த சிங்காரவேலர் அதை ஏற்று இயக்கத்தில் பங்கேற்றார். தன்னுடைய கருப்பு அங்கியை எரித்து 'இனி வழக்கறிஞர் தொழிலில் ஈடுபட மாட்டேன்' என்று அறிவித்தார். 1921-ல் வேல்ஸ் இளவரசரின் வருகையை எதிர்த்து நாடு முழுவதும் பல அகிம்சைப் போராட்டங்கள் நடத்தப்பட்டன.

***வ.உ.சிதம்பரனார்:*** 'கப்பலோட்டிய தமிழன்' என்று அழைக்கப்படும் வ.உ.சி.யின் (1872-1936) இயற்பெயர் வ.உ.சிதம்பரம். வழக்கறிஞர், எழுத்தாளர். கப்பல் போக்குவரத்தில் ஆங்கிலேயர்களின் மேலாதிக்கத்தை எதிர்த்து இவர் தொடங்கியதுதான் 'சுதேசி நாவாய்ச் சங்கம்'. அந்த நிறுவனத்துக்குச் சொந்தமாகக் கப்பலும் வாங்கினார். ஆங்கிலேயர் ஆட்சியை எதிர்த்து மக்களிடம் தொடர்ந்து உரையாற்றியதன் காரணமாக 1908-ல் கைதுசெய்யப்பட்டார். சிறையில் இருந்த காலத்தில் எண்ணெய்ச் செக்கை இழுக்கும்படி நேர்ந்ததால் 'செக்கிழுத்த செம்மல்' என்ற பெயரும் ஏற்பட்டது.

***ராஜாஜி:*** இவரின் (1878-1972) இயற்பெயர் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரி. இவர், மக்களால் ராஜாஜி என்று அழைக்கப்படுகிறார். வழக்கறிஞர் தொழிலை விட்டு, காந்தியினால் ஈர்க்கப்பட்டு விடுதலைப் போராட்டத்தில் ராஜாஜி ஈடுபட்டார். 'காந்தியின் மனசாட்சி' என்றே அவர் அழைக்கப்பட்டார். 1930-ல் காந்தி 'உப்பு சத்தியாகிரகம்' தொடங்கியபோது, தமிழகத்தில் அதற்கு ராஜாஜி தலைமையேற்றார். அதற்காக ஆறு மாதங்கள் கடுங்காவல் தண்டனை பெற்றார். தீண்டாமை ஒழிப்பு, இந்து-முஸ்லிம் ஒற்றுமை போன்றவற்றுக்கு காந்தி கொடுத்த முக்கியத்துவத்தை ஆழமாகப் புரிந்துகொண்டார் ராஜாஜி.

***பாரதியார்:*** இவரின் (1882-1921) இயற்பெயர் சுப்பிரமணியன். இவருடைய கவிதை எழுதும் ஆற்றல் காரணமாகச் சிறு வயதிலேயே சூட்டப்பட்ட பெயர்தான் பாரதி. பிற்காலத்தில் பாரதியார் என்று அறியப்படலானார். அவர் நடத்திய 'இந்தியா' பத்திரிகையை ஆங்கிலேய அரசு தடைசெய்ததோடு அவருக்குப் பிடியாணையும் பிறப்பித்தது. பிரெஞ்சுக்காரர்கள் ஆளுகைக்கு உட்பட்ட புதுச்சேரிக்குத் தப்பிச்சென்று, அங்கே 'இந்தியா' பத்திரிகையை அவர் நடத்தினார். அவரது தேசபக்திப் பாடல்கள் தமிழகத்தில் விடுதலைப் போராட்டத்துக்குப் பெரும் ஊக்கம் கொடுத்தன.

***திரு.வி.க.:*** திருவாரூர் வி.கலியாணசுந்தரனார் (1883-1953) என்கிற இயற்பெயரைக் கொண்ட திரு.வி.க. பள்ளி ஆசிரியர் பணியைத் துறந்து, தேச விடுதலை உணர்வைப் பரப்பும் 'தேசபக்தன்' இதழின் ஆசிரியராகப் பொறுப்பேற்றுக்கொண்டார். திரு.வி.க.வின் அயல்மொழிச் சொற்களற்ற தமிழ்ப் பயன்பாடு 'தேசபக்தன்' இதழின் தனிச்சிறப்பாக மிளிர்ந்தது. உடனடிச் செய்திகளைத் தரும் அவருடைய தீவிரத்தால் 'ஜாலியன் வாலாபாக்' படுகொலை குறித்து, 'தேசபக்தன்' மூலமாகவே தமிழர்கள் முதலில் தெரிந்துகொண்டார்கள். அடுத்து, அவர் ஆசிரியர் பணியாற்றிய 'நவசக்தி' வார இதழும் விடுதலை பிரச்சாரப் பணியை மேற்கொண்டது.

***காமராஜர்:*** சட்ட மறுப்பு இயக்கக் காலத்தில் வேதாரண்யம் உப்பு சத்தியாகிரகத்தில் கலந்துகொண்டு, அலிபூர் சிறையில் தண்டனை அனுபவித்தவர் காமராஜர் (1903-1975). விருதுநகர் வெடிகுண்டு வழக்கில் கைதாகி, குற்றச்சாட்டு நிரூபிக்கப்படாததால் விடுதலையானவர். 1940-ல் மீண்டும் ஒரு முறை கைதாகி வேலூர் சிறைவாசம். சிறையில் இருந்தபோதே விருதுநகர் நகராட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர், விடுதலையானதும் பதவியிலிருந்து விலகினார். 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தில் தீவிரமாகப் பங்கெடுத்துக்கொண்டதற்காகக் கைதுசெய்யப்பட்ட அவர், மூன்று ஆண்டுகள் சிறைத் தண்டனை பெற்றார்.

***கேப்டன் லட்சுமி ஷாகல்:*** நேதாஜியின் தலைமையில் 'இந்திய தேசிய ராணுவம்' பிரிட்டிஷாரை எதிர்த்து, பர்மா போர்முனையில் களம் கண்டது. தேசிய ராணுவத்தில் 500 பெண் வீராங்கனைகளைக் கொண்ட படைப்பிரிவான 'ஜான்ஸி ராணி ரெஜிமெண்ட்'டின் தலைவராக இருந்தவர் லட்சுமி (1914-2012). மருத்துவராக சிங்கப்பூருக்குச் சென்ற அவர், தேசிய ராணுவத்தில் ஆயுதம்தாங்கினார். 'இந்திய தேசிய ராணுவம்' பிரகடனப்படுத்திய நேதாஜி தலைமையிலான அமைச்சரவையில் பெண்கள் நலனுக்கான அமைச்சராகவும் பொறுப்புவகித்தார். பர்மியப் போர்முனையில் பெண் வீரர்களின் மருத்துவமனை மீது வீசப்பட்ட வான்குண்டுத் தாக்குதலில் அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பினார் லட்சுமி. போர்க்கைதியாகப் பிடிபட்டு, இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பப்பட்டார்.

***சுப்பிரமணிய சிவா:*** வ.உ.சி., பாரதியார் ஆகியோரின் நெருங்கிய நண்பர் சுப்பிரமணிய சிவா (1884-1925). இவர்களால் ஈர்க்கப்பட்டு விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட சுப்பிரமணிய சிவா, ஆங்கிலேயர்களுக்கு எதிராகத் தீவிரமாக மக்களிடையே உரையாற்றினார். 1908-ல் வ.உ.சி.யும் சிவாவும் கைதுசெய்யப்பட்டனர். 1912-ல் விடுதலை செய்யப்பட்ட பிறகு, இதழியல் பணியிலும் ஆன்மிகப் பணியிலும் அவர் ஈடுபட்டுவந்தார். 1921-ல் இரண்டாவது முறையாக தேசத்துரோகக் குற்றச்சாட்டின் கீழ் கைதுசெய்யப்பட்டாலும், தொழுநோயால் வாடியதால் 1922-ல் விடுதலை செய்யப்பட்டார். பாப்பாரப்பட்டியில் 'பாரத மாதா' கோயில் கட்டும் முயற்சியை மேற்கொண்டார். அந்தக் கோயிலைக் கட்டுவதற்கு முன் நோய் தீவிரமடைந்து 41-வது வயதில் சிவா காலமானார்.

********